**Deposition of witness**

**(Chapter XXII Code of Criminal Procedure)**
**-----------**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| Calender | : | அசல் வழக்கு எண்.243/2022 |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | வா.சா. 1.திரு.கணேசன் த.பெ.தங்கமுத்து பிள்ளை (லேட்) |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | |
| Husband's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of  of the 05th day of January 2024

05.01.2024
O.S.No.243-2022
வா.சா. 1.திரு.கணேசன் த.பெ.தங்கமுத்து பிள்ளை (லேட்)
சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. தங்கமுத்து பிள்ளை பெயரில் உள்ள பட்டா எண்.128-க்கான கணினி பட்டா நகல் அது வா.சா.ஆ**-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.03.2012 தேதியிட்ட பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் அது வா.சா.ஆ**-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.04.2012 தேதியிட்ட கிரைய ஆவணம் நகல் அது வா.சா.ஆ**-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தங்கமுத்து பிள்ளை மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர்களது பெயரில் உள்ள பட்டா எண்.128-க்கான கணினி பட்டா அது வா.சா.ஆ**-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.46/2013 வழக்கின் பிராது சான்றிட்ட நகல் அது வா.சா.ஆ**-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கில் இந்த வழக்கின் வாதி உள்பட அனைத்து பிரதிவாதிகளும் தாக்கல் செய்த எதிர் வழக்குரை சான்றிட்ட நகல் அது வா.சா.ஆ**-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.08.2021 தேதியில் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அது வா.சா.ஆ**-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.10.2021 தேதியில் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அது வா.சா.ஆ**-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதிக்கு நோட்டிஸ் சார்வு செய்யப்பட்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் அது வா.சா.ஆ**-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதிக்கு 25.10.2021 தேதியிட்ட நோட்டிஸ் சார்வு செய்யப்பட்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் அது வா.சா.ஆ**-10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டி மதிப்பு அது வா.சா.ஆ**-11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.